A. அன்னே னன்னுனே வாசுதேவா

அன்னுன்னே னன்னுனே னன்ன னன னுன்னே

B. அடா னன்னன் னன்னே அன்னுன்னே

னுனன் னன்னே னன்னே னனனுனே

A. னன்னுன்னே னன்ன னனன் னுன்னே

B. அடா னுனன் னன்னே னுனுன்னே

னுனுனே னன்னே னன னுனே

A. வாசுதேவா! நாஞ்செத்துட்டா நாடெல்லா ஜெயம்பா போரதில்லே,

B. ஆ.

A. அரி ராமா! மாயவனே!

B. ஆ.

பாட்டு:-

A. நான் மைந்தன் வரம்

மைந்தன்வரம் வாங்கவந்து நா வாங்கவந்து

B. அங்கே வாங்கவந்து நல்ல வாங்கவந்து

A. இனி நா மன்னவரை பரந்தாமா

மன்னவரை நானிழந்தே இனி நானிழந்தே

B. அங்கே மைந்தன்வரம் மைந்தன் வரம்

வாங்கவந்து நல்ல வாங்கவந்து

A. எழுதும் நல்லோ அங்கே கருத்தாலே

B. அங்கே மன்னனையே கிண்டானி

நானிழந்தே ஆத்தா நானிழந்தே

A. அங்கே குழந்தைவரம் குழந்தைவரம்
வாங்கவந்து நா வாங்கவந்து

B. அட மாயவனே நல்ல ஏதுசெய்வே

A. நான் கொற்றவரை வாசிதேவா
கொற்றவரை நானிழந்தே இனி நானிழந்தே

B. அடா குழந்தைவரம் குழந்தைவரம்
வாங்கவந்து நல்ல வாங்கவந்து

A. ஆயமரோ அங்கே மாயவனே

B. அங்கே கொற்றவரே சண்டாளி
நானிழந்தே அந்தா நானிழந்தே

A. பிள்ளைவரம் சண்டாளா
பிள்ளைவரம் வாங்கவந்து நா வாங்கவந்து

B. ஐயா வாங்கவந்து நல்ல வாங்கவந்து

A. நா புருஷனை புருஷனை
நானிழந்தே ஐயோ காஞ்சிநாதா

B. அங்கே அழுகாதை அண்ணக்கொடி
அழுகிறளே நல்ல அழுகிறளே

A. ம் அழுகிறேனே அங்கே மலர்க்கிளியா

B. அங்கே அளைவற்ற அளைவற்ற
தாமரையா நல்ல தாமரையா

About 3 min. and 1 sec. ↑

A. கன்னியழுகிற காந்தேரி சொருகிற...

B. சொருகிற...

A. கூடப்போட்ட செல்லக்கா !

B. ஆ.

A. நீ, இந்தச் சதி நெனச்சிருந்தியா ?

B. ஆ.

A. நாங்க அறியாஞ்சிவனும், அன்னமும் பேரும் இரண்டு பேரும்

B. ஆ.

A. ஆயாரம் பாத்து கூந்தல விரிச்சு விட்டு,

B. ஆ.

A. செல்லாத்தா கோயிலுக்கு

B. ஆ.

A. வழி நடந்து வர்றனே...

B. வருகிறனே...

A. இரண்டு பேரும் ஓமக்குண்டெண்ணு நின்னு

B. ஆ.

A. செல்லாத்தா

பாட்டு:-

நீ கோயலிலே செல்லாத்தா

இருக்கிறயோ அம்மா இருக்கிறயோ

B. அங்கே இருக்கிறயோ ஆத்தா இருக்கிறயோ

A. இனி தெரியாது செல்லக்கா

தெரியாது போயிட்டியா அம்மா போயிட்டியா

B. ஐயா கோயிலிலே செல்லாத்தா

இருக்கிறயா ஆத்தா இருக்கிறயா

A. ஐயோ சதிகார அம்மா சண்டாளி

B. அங்கே தெரியாது தெரியாது

போயிட்டயா ஆத்தா போயிட்டயா

A. ஆத்தா நிய்யா மாணியிலெ

சண்டாளி இருக்கிறயா அம்மா இருக்கிறயோ

B. அங்கே இருக்கிறயா ஆத்தா இருக்கிறயா

A. இனி மாணிவிட்டு செல்லக்கா

மாணிவிட்டு போயாட்டியோ அம்மா போயாட்டியோ

B. அங்கே மாணியாலெ செல்லாத்தா

இருக்கிறயா ஆத்தா இருக்கிறயா

A. அங்கே சதிகார ஐயா செல்லக்கா

B. அங்கே மாணிவிட்டு சதிகாரி

போயிட்டயா ஆத்தா போயாட்டயா

A. அந்த மாணிசத்தி காங்கேரி

மாரழுச்சா ஙகாத்தா மாரழுத்தா

B. ஐயா மாரழுத்தா ஆத்தா மாரழுத்து

A. இனி இனி காராளெ

காராளெந் தேவியலெவோ அங்கி தேவியலவோ

B. அவ கன்னி நல்ல கன்னி

அழகிளெ ஆத்தா அழகிளெ

A. ம் அன்னக்கொடி அங்கெ விளக்மாது

B. அவோ காங்கேரி காங்கேரி

சோகிலெ ஆத்தா சோகிலெ

A. அவ கோட்டை சத்தி கோட்டை சத்தி

மாரழுச்சா அங்கெ மாரழுச்சா

About 2 min. and 54 sec.

B. அங்கு தாமரையா நல்ல பொற்கொடியா

A. இனி அன்னக்கொடி அன்னக்கொடி

விளர்மாது அம்மா விளர்மாது

B. அங்கே மாடி சுத்தி தாமரையா

மாரமுத்து நல்ல மாரமுத்து

A. இனி மாரமுச்சா அங்கு மாரமுச்சா

B. அங்கே மங்கை பெண்ணு மங்கை பெண்ணு

சொகுறளே நாத்தா சொகுறளே

A. "அத்தா, இந்தச்சதி நினைக்க எத்தனை நாள் நினைச்சிருந்தே...

B. நினைச்சிருந்தே...

A. சண்டாளி! அப்பவும் நாதன் சொன்னரு அவரு சொல்லத்-தடுத்து

B. ஆ.

A. நான் தேரோட்டி வெச்ச,

B. ஆ.

A. என்னைக்கிதி ஆனைம்மா...

B. ஆனேணம்மா...

A. சண்டாளி, உலகத்திலே எனக்கு பேருண்டு பண்ணி வெச்சிப் போட்டயே ?

B. ஆ.

A. ஆயிரம் பங்காளிக்க வண்டகளும்,

B. ஆ.

A. அந்த முண்டெ, பொன்னிவள நாட்லெ கொளுத்துப் பணமிருக்குதின்னு

B. ஆ.

A. தெரோட்டி வெச்சு,

B. ஆ.

A. தெருலெ நசுங்கி செத்துப் போயிட்டாங்கன்னு

B. ஆ.

A. எங்க உலகத்தார் கரிப்பாங்க...

B. கரிப்பாங்க...

A. பெண்ணே!

B. ஆ.

A. எனக்கு நல்லா காது கேக்கறதில்லெ.

B. ஆ.

A. தெரியப்பட சொல்லம்மா, என்னது?

B. ஆ.

A. நாதா!

B. ஆ.

A. ~~[illegible]~~ நாம செல்லாத்தாளுக்கு

B. ஆ.

A. தெரோட்டி வெச்சு ஒப்புதமில்லீன்னு,

B. ஆ.

A. நாம ரண்டு பேருமு

B. ஆ.

A· ரண்டு சக்கரத்திலெ தலெ இதெந்தா

B· ஆ.

A· தெருப்போயி நிலெ செருமுன்று செல்லக்காபோயி

B· ஆ.

A· ஆசாரியாடத்திலெ சொல்லி,

B· ஆ.

A· "தெரு நடகாமலிருக்கிறுங்க நாதா"...

B· நாதனைய்யா...

A· "சண்டாளி! கூடப்போட்ட முண்டெ!

B· ம்.

A· நாம இருக்கவரைக்கி உப்பொரைக்க, புளியொரைக்க சாப்பட்டு

B· ஆ.

A· மீதச் சொத்திருந்தா எவனை சாப்பட்டுட்டுப்போரே. வேண்டாமின்னு சொன்னெ. கொடுத்துப் போயி

B· ஆ.

A· ஆட்டவாந்தாசம்பேச் செக் கேட்டு, அவம்பொறவுக்கு திரிஞ்சு

B· ஆ.

A· இப்ப என்ன கெதி ஆனமம்மா...

B· ஆனேனம்மா...

A· சண்டாளி!

B· ஆ.

A· நான் நல்லாச் செத்துட்டா,

B· ஆ.

பாட்டு:-

A. எனக்கு உறவு நல்லோ

உறவுப் பறையனுண்டு அங்கு பறையனுண்டு

B. ஐயா பறையனுண்டு ங்காத்தா பறையனுண்டு

A. எனக்கினி ஒரு மொழு சண்டாளி

ஒரு மொழு துண்டுமுண்டு அம்மா துண்டுமுண்டு

B. அடா உறவு நல்ல

உறவுப்பறையனுண்டு ங்காத்தா பறையனுண்டு

A. ம் அதெரே அங்கை மணிவெந்தே

B. அங்கு ஒரு மொழு ஒரு மொழு

துண்டுமுண்டு ங்காத்தா துண்டுமுண்டு

A. இனி காணியில கூடப்போட்ட முண்டெட

காணியிலே செத்துவிட்டா நாஞ்செத்துவிட்டா

B. ஐயோ செத்துவிட்டா ஆத்தா செத்துவிட்டா

A. எைக்கினி காணிநல்லோ

காணிப்பறையனுண்டு அங்கு பறையனுண்டு

B. இனி காணியிலே காணியிலே

செத்திருந்தா ஆத்தா செத்திருந்தா

A. இனி அதெரே அங்கை மணிவெந்தே

B. அங்கே காணிநல்லோ

காணிப்பறையனுண்டு ஆத்தா பறையனுண்டு

A. இனி காணிநல்லோ மாயவரே

காணிப்பறையனுண்டு அங்கு பறையனுண்டு

About 3 min. and 4 sec. ↑

B. அடா மாயவரே நல்ல நீது செய்வே

A. எனக்கினி காப்பணைத்து காப்பணைத்து

துண்டுமுண்டு அல்டு துண்டுமுண்டு

B. ஐயோ காணியிலே காணியிலே

செத்திருந்தா ஆத்தா செத்திருந்தா

A. இனி அழுகுரேரே அல்கை ராஜதுரே

B. இனி காப்பணைத்து காப்பணைத்து

துண்டுமுண்டு நல்ல துண்டுமுண்டு

A. சாமி நா அதுக்கு நல்ல மாயவனே

அதுக்கேங் குறைசெய்தே நாங்குறைசெய்தே

B. ஐயோ குறைகள் செய்தே நல்ல மாயவனே

A. நானினி அத்தினைக்கி சண்டாளி உம்பேச்செக்-கேட்டு

அத்தினைக்கிந்தாமை செய்தே நாந்தாமை செய்தே

B. அல்கை அழுதாரை இன்னுடையா

அழுகிறெரே அப்பா அழுகிறெரே

A. அந்த மசெச்சாமி அல்கை அழுகுரெரே

B. அல்லகே அந்தரத்தில் அந்தரத்தில்

தவிக்கிறேரோ அண்ணே தவிக்கிறேரோ

A. நான் காணியாலே செத்திட்டா எனக்கு

காணிப்பறையனுண்டு காப்பணைத்து துண்டுமுண்டு..

B. ஆ.

A. சண்டாளி!

B. ஆ.

A. இனி நாம் போயி தெருவெ பத்து,

B. ஆ.

A. என்னுடைய கண்ணு முழி எந்தப் பக்கம் போகுதோ?

B. ஆ.

A. எம்பட மண்டெ முழி எந்தப் பக்கம் போகுதோ?

B. ஆ.

A. எனக்குத் தெரியாது மாயவனே..

B. ஆ.

A. நமக்கு காலம் வந்து நாமு முடிவாகி தெய்வ சபைக்கி உயிரு போயிட்டா, உயிரு போறது தெரியாமெ இருக்குமே.

B. ஆ.

A. அம்மா, இந்தச் சதி நினைக்க எத்தனை நாள் நினைச்சிருந்தே..

B. நினைச்சிருந்தா...

A. சண்டாளா! அப்படிருந்து வேண்டான்னுதுக்கு எம்பேச்சை கேக்க, மொதல்லெ கலியாணஞ்செய்தாப்பலெ புடிச்சு கேக்கமாண்டன்னு தாசம் பொறவுக்கத்திருஞ்ச மூண்டே!

B. ஆ.

A. அநியாயமா நா தெருலெ நசுக்கி உயிருக்கொல்லும் பிழையா

B. ஆ.

A. வெச்சுட்டியா மாயவனே...

B. மாயவனே...

A. நாதா!

B. ஆ.

A. என்ன செய்யலாமுங்க?

B. ஆ.

A. வரும்வினை வந்தால் வழியிலுந் தங்காதுங்கோ...

B. தங்காதய்யா...

A. கொழுத்த முண்டை, நிய்யி! நீ, கொழுத்த முண்டை!
வெனையா வந்திட்டதே.

B. ஆ.

A. எல்லா நம்ம வாயிலெலெ இருக்கிது தாசம் பெச்சைக்
கேட்டு,

B. ஆ.

A. இப்பத்தெருலெ நசுங்கி என் உயிரு

B. ஆ.

A. எந்தப்பிறகாரம் எப்படிப் பறக்கிறீன்னு தெய்த்தெரியாது.."

B. தெரியாது...

A. "நாதா, என்ன செய்யறது? வாங்க, எல்லா எம்பெருமான்
மாயவர் இருக்கறன்னு"

B. ஆ.

A. எங்சாமியெக் கூட்டிக்கிட்டே வந்து,

B. ஆ.

A. வடக்குமின்னு நிக்கற தெருலெ,

B. ஆ.

A. தெழவரத்து சக்கரத்திலெ

B. ஆ.

A. மேக்கெ தலெயெ வெச்சு, தெக்கெ காலை நீட்டி
வடக்கு முகமாக படுத்துக்கிங்க நாதா.

B. ஆ.

A· நான் மேவறத்துச் சக்கரத்திலெ போயி

B· ஆ.

A· கெழக்கெ தலயெ வெச்சு, மேக்கெ காலெ நீட்டி

வடக்குமின்னு பகேத்துக்கறே.

B· ஆ.

A· சாமி, தூங்கு வந்து நகுங்கி

B· ஆ.

A· அப்பமெயே நம் உயிரு,

B· ஆ.

A· அந்திரமா போகவேணுங்காஞ்சிநாதா...

B· காஞ்சி நாதா...

A· எந்தன் பாலமலைச் ஜோசியா பரமகுருதன்னாசி

ஏழைப் பரதேசி எம்பெருமாள் மாயவனே...

B· மாயவனே...

A· உம்பேச்செக் கேட்டு எனக்கு இந்தக் கெதி ஆச்சா"...

B· ஆச்சுதய்யா...

A· பரந்தாமனைப் பருவதியா நெனச்சு அழுகறபோது

B· ஆ.

A· பூபாலகன், பண்டரிபதி நாதன்,

B· ஆ.

A· பாற்கடலிலிருந்து

B· ஆ.

A· "அடடா சண்டாளன்! சதிகாரன்! கொலைகாரன்!

B· ஆ.

A· பங்காளிக் கவண்டக சொல்லக் கேட்டு

B· ஆ.

A. ஆசாரி ரகுபெரும்

B. ஆ.

A. குலைப் போட்டு, பூமிலெ ஆணியைப் போட்டு
விருஞ்சுக் கிட்டானு?

B. ஆ.

A. இரண்டு பேரையி சக்கரத்திலெ தலை கேக்கச் சொல்லி,

B. ஆ.

A. நாம இந்த வரத்திலெ இறைவு வந்து நேர்ந்திட்டுது.

B. ஆ.

A. அந்த வரத்திலை தவக்குறை நேர்ந்திட்டுது.

B. ஆ.

A. போய்க் காக்கவேண்டுமென்று கருடனை வரவழைத்து,

B. ஆ.

A. கெருடன் பேரில் சீனி வைத்து,

B. ஆ.

பாட்டு:

A. அன்னன்னே னன்னன்னே னனன்னன்ன

B. னனே னன்ன

A. னனன்னே னன்னனே னனன்னன்ன

B. அன்னனே அன்னனே னனே னன்னே

A. போடரா சாமி

B. னனே னன்னே

A. ஆமாமா

B. னனன்னே னன்னனே னனே னன்ன

A. ஏ மண்ணளந்து 'என்னந்தா கணக்குச் சொன்ன

B. கணக்குச் சொன்ன

A. மண்ணளந்து என்சாமி கணக்குச் சொன்ன

B. கணக்குச் சொன்ன

A. மாயவர் எஞ்சாமி வருகிறாரே

B. மண்ணளந்த அண்ணா கணக்குச் சொன்ன

A. கணக்குச் சொன்ன

B. கணக்குச் சொன்ன

A. கணக்குச் சொன்ன

B. மாயவனார் எம்பெருமான் வருகிறாரே

A. ஏ அரக்கர்களை எஞ்சாமி வேரறுத்த

B. வேரறுத்த

A. அரக்கரை எஞ்சாமி வேரறுத்த

B. வேரறுத்த

A. அரிராமர் எஞ்சாமி பறக்கிறாரே

B. அரக்கர்களை எஞ்சாமி வேரறுத்த

A. போடரா சாமி

B. வேரறுத்த

A. வேரறுத்த

B. அரிராமர் எம்பெருமான் வருகிறாரே

A. ஏ மண்போட்டு எஞ்சாமி பொன்விளையும்

B. பொன்விளையி

A. மண்போட்டு எஞ்சாமி பொன்விளையும்

B. பொன்விளையி

A. மருட பொன்னி எஞ்சாமி வளநாடு

B. அட மண்போட்டு அண்ணாங்கை பொன்விளையி

A. போடராசாமி

B. பொன்விளையி

A. ஆமடா சாமி

B. இப்ப மருட முடி அங்கே வருகிறாரே

about 1 min. and 4 sec.

A. பரந்தாமன் பூபாலகன் கண்முடி இமிழ்க்குமுன்னமே

B. ஆ.

A. பொன்னிவளநாடு வந்து,

B. ஆ.

A. செல்லாத்தா கோயில் தெரிலை,

B. ஆ.

A. வழவத்தை மாத்தி ஈ·போலெ வெட்டியிட்டார்...

B. வெட்டிவிட்டார்...

A. அரியிஞ்சிவனு, அண்ணனும் பேடும்,

B. ஆ.

A. பத்தாளும் பரிவாரத்தை திரண்டுபேடும் சக்கரத்திலை பதேந்திருக்கறபோது, அவ்வளவு படைகளும் பார்த்தா

B. ஆ.

A. அஞ்சு வயசுக் குழந்தைக, அதாவது வயித்தை கிழுத்துக்கிட்டு, ~~[illegible]~~ ஊனீா நீக்கை ஒதுக்கிக்கிட்டு கூட்டத்து சொல்ல முடியாது...

B. முடியாது...

A. அசிய பதினெணு பங்காளிக்கவண்டக மக்களும் கூட நிக்கிறாங்க.

B. ஆ.

A. அல்லா வடவறத்தல, சேர வடக்கெ பார்த்தா கண்ணுக் கெட்டின தூர நிக்கிறபோது,

B. ஆ.

A. ஒரு அசையாமல் திருக்கும்போது ஒருவருக்கும் தெரியாமல் மாயவர் வந்து ஈ·போல வெட்டி,

B. ஆ.

A. அந்தரத்திலெ ஒருவெட்டு புமீருன்னு ஆச்சு.

B. ஆ.

A. அடடா அண்டலோகம் பிரமலோகமல்லா அப்பழையே திடு திடுன்று நடுங்குச்சு.

B. ஆ.

A. அப்ப ஆசாரிக்கி

B. ஆ.

A. (      ) என்னமோ தெரிலயே?

B. ஆ.

A. ஆகாயமார்க்கமாக அந்தரத்திலே வெட்டாதேங்க.

B. ஆ.

A. ஒரு வெட்டு டிமிருன்னுது.

B. ஆ.

A. அண்டலோகம் பிரமலோகம் அப்பழயே வெட்டாகவும் நடுங்குது.

B. ஆ.

பாட்டு:-

A. அன்ன ஞன ஞன ஞன ஞனே னன்னு

B. அடா ஞனே னன்னே

A. இனி மாயனம்மா

B. ஐயய்யா ஞனே னன்ன

A. அன்னெ ஞஞன்ன ஞனன் ஞன ஞனே னன்னு

B. ம் அன்னை னன்னே நனன்னன்னே ஞனே னன்ன

A. அங்கெ ஞனே னன்னே

B. ஐயய்யோ ஞனே னன்னே

A. னனெ ஞனே னன்னு

B. அடா ஞஞன்ன ஞனன்னன்னே ஞனே னன்னே

A. ஏ ஆயடே. கிருபையாலே கிருபையாலே

B. ஐயய்யோ கிருபையாலே

About 1 min. and 22 sec.

A. அங்கை கிருபையாலே

B. ஐயய்யோ ஏதா செய்வே

A. இப்ப அந்திரமா தேரு மேலை எழும்புதடா

B. ஏ மாயனுட அருளினாலே அருளினாலே

A. அங்கை அருளினாலே

B. ஐ ஐயய்யோ அருளினாலே

A. அங்கே அருளினாலே

B. அங்கே மருமையா போகுதடா தேரேமெல்ல

A. ஏ ஈசுர பனியுயரம் பனியுயரம்

B. ஐயய்யோ பனியுயரம்

A. அங்கை பனியுயரோ

B. அடடா ஏதா செய்வே

A. அங்கே மேலே பறக்குதடா தேரேமங்கே

B. ஏ அந்திரமா போகுதடா போகுதடா

A. அங்கை போகூதடா

B. அடடா போகூதடா

A. அங்கை போகூதடா

B. அங்கை மாயனுட கிருபையாலே கிருபையாலே

A. ஈசுர பனியுயர அப்படியே அந்திரமா மேலை போனதும்,

B. ஆ.

A. ஒருவருக்கு — சனமென்டு எட்டுத்தாண்டு

B. ஆ.

A. வடக்கை போகும்போது, பங்காளிக்கவண்ட மக்க
பதினாறு பேரையும்,

B. ஆ.

A. ஆசாரி ஆறு பேரையும்

B. ஆ.

A· அம்மீலெ அரைச்சு கிண்ணிலெ வழிச்சுப் போட்டு,

B· ஆ.

A· தேர்ப் போயி நிலெபோயிச் சேர்ந்துதங்கை...

B· சேர்ந்துதங்கை...

A· அப்பேர்ப்பட்ட கூட்டத்தில்

B· ஆ.

A· ஒருவர் திரேகத்தில் நாடாமல்,

B· ஆ.

A· ஆசாரி ஆறுபேரும், பங்காளிக் கவண்டக பதினாறு பேரையும்

B· ஆ.

A· உடலெப் புகுங்கி மாலை போட்டு,

B· ஆ.

A· தேருப் போயி

B· ஆ.

A· நிலெ போயி நின்னு தங்கை...

B· நின்னுதங்கை...

A· அரை நாழிகை யிருந்து,

B· ஆ.

A· "பெண்ணே!

B· ஆ.

A· ஏதோ, தின்ன தேடிவந்து தலையை நசுக்கிறியா?

B· ஆ.

A· தின்ன, எண்டைவரைக்கி இருந்துக்கிட்டிருக்கறது? பாரு!

B· ஆ.

A· அப்பியீன்னுரு.

B· ஆ.

A· பருவதியா கண் முழிச்சுப் பார்க்கற போது,

B· ஆ.

A· ஒரு குஞ்சு, குழந்தை, ஒரு பிராணி கிடையாது.

B· ஆ.

A· ஒருவருங் கிடையாது.

திக்குன்னு எந்திருச்சு திருமுகத்தைத் தான் துடைச்சா...

B· தான் துடைத்தா...

A· "பெண்ணே! பெரும் இருந்ததே எங்கேயோ காணுமே?"

B· ஆ.

A· "என்னமோ நாதா போனமருமை தெரிலை."

B· ஆ.

A· எல்லா மாயவரு ^இருக்காருன்னு எந்திருச்சு,

B· ஆ.

A· அரிமஞ்சிவனு வடக்கை வரும்போது,

B· ஆ.

A· வடக்கை வந்து கெழக்கேன்னுத் திரும்புனாங்க.

B· ஆ.

A· அதுலெ பதினாறு பேரு, இதுலெ ஆறு பேரு.

B· ஆ.

A· பதினாறு ஆறு இருபத்திரண்டு பேரு.

B· ஆ.

A· நெடுகத்திலெ குடலைப் புடுங்கிப் போட்டிருக்கிது.

B· ஆ.

A· "நாதா!

B· ஆ.

A· இதாருக்க இது?" "அம்மா!

B· ம்.

A· இதுதான் நம்ம சதிகாரப் பங்காளிக.

B· ஆ.

A· நம்முளுக்கு சதி தானு நெனைச்சிருப்பாங்க.

B· ஆ.

A. அந்த எம்பெருமான் மாயவர்

B. ஆ.

A. ஆசாரி ஆறு பேரையும்,

B. ஆ.

A. பங்காளிக் கவண்டை மக்க பதினாறு பேரையும்

B. ஆ.

A. அறைச்சுக்கிட்டுப் போயாட்டுதே"...

B. போயாட்டுதே...

A. "நாதா! அல்லா, அந்த சிவபெருமான் இருக்காரு, பரந்தாமன், பூபாலகன்

B. ஆ.

A. அவருடைய கிருபையால் தப்பினோம். இல்லாட்டி தப்பிக்க முடியுங்களா நாதா"ன்னு

B. ஆ.

A. போய் பார்க்கற போது

B. ஆ.

A. தேடிப் போயி கீழை பூமிலெ இறங்கீட்டதெ.

B. ஆ.

A. அதுதே இன்னைக்கி அந்த செல்லாத்தாளுக்கு தேடிக் - கெடையாது.

B. ஆ

A. தேடிப் போயி

B. ஆ.

A. பூமிலெறங்கீட்டதெ. ஆமா, இவளுக்கு தெரோகாதுன்னு - ட்டு அவுளுக்கு கோபம் வந்து, மாயவரு கொண்டு பூமிலெ கீழை எறக்கீட்டாரு.

B. ஆ